வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 29.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று டோக்கியோவில், ஜப்பான் பிரதமர் திரு ஷிகேரு இஷிபா-வுடன் இணைந்து, 15-ஆவது இந்தோ-ஜப்பான் வருடாந்திர உச்ச மாநாட்டில் பங்கேற்றார்.

இந்தியத் திறமைகளும், ஜப்பானிய தொழில் நுட்பங்களும் இணைந்து, இந்தியாவில் தொழில் நுட்ப புரட்சி ஒன்றை ஏற்படுத்த முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இன்று தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் 9.11 கோடி ரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ள தாவரவியல் பூங்காவை, இன்று வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் சுற்றிப் பார்த்து ஆய்வு செய்தார்.

மோடி-ஜப்பான்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று டோக்கியோவில், ஜப்பானிய பிரதமர் திரு ஷிகேரு இஷிபா-வுடன் இணைந்து, 15-ஆவது இந்தோ-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்றார். இருதரப்பு உறவுகளின் எல்லா அம்சங்களையும் இருதலைவர்களும் ஆராய்ந்து, உறவுகளை அடுத்த நிலைக்கு உயர்த்துவதற்கான வழிமுறைகள் குறித்து விவாதித்தனர். பின்னர் செய்தியாளர் கூட்டத்தில் பிரதமர் திரு நரேந்திர

மோடி பேசுகையில் உலக அளவிலான அமைதி மற்றும் ஸ்திரத் தன்மைக்கு, இந்தியா-ஜப்பான் கூட்டாண்மை மிக அவசியம் என்றார். அடுத்த 10 ஆண்டுகளில் முதலீடு, தொழில் நுட்பம், புதுமையாக்கம், மக்கள் நிலையான தொடர்புகளில் உறவுகளை மேலும் வலுப்படுத்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இருநாடுகளுக்கும் இடையில் பொருளாதார கூட்டாண்மைக்கு இணையாக, பசுமை கூட்டாண்மையும் வலுவடைந்து இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஜப்பான் பிரதமர் இன்றைய செய்தியாளர் கூட்டத்தில் இந்தியாவின் புதுமை படைப்புகளால் உலக அளவில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக கூறினார். இந்தியா-ஜப்பான் உறவுகளால், இருநாடுகளும், பரஸ்பரம் நன்மை பெறும் என அவர் தெரிவித்தார்.

முன்னதாக பிரதமர் திரு நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமருடன் இணைந்து, இந்தோ-ஜப்பான் பொருளாதார பேரவைக் கூட்டத்தில் பேசுகையில் இந்தியத் திறமைகளும், ஜப்பானிய தொழில் நுட்பங்களும் இணைந்து, இந்தியாவில் தொழில் நுட்ப புரட்சி ஒன்றை ஏற்படுத்த முடியும் என்றார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்.............

**(வாய்ஸ்)**

*மோடி-ஜப்பான்*

**<u>(வாய்ஸ்)</u>**

<u>இந்தியாவில், பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறையைத் தொடர்ந்து அணுசக்தி துறையும், தற்போது தனியார் முதலீடுகளுக்கு திறந்து விடப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். **செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கணினி, செமி கண்டக்டர், உயிரி தொழில் நுட்பம்** போன்ற பல புதிய துறைகளில் இந்தியா துணிச்சலான பல முன் முயற்சிகளை தொடக்கி இருப்பதாக அவர் கூறினார்.</u>

மோட்டார் வாகன உற்பத்தி, மெட்ரோ ரயில் கட்டமைப்பு உள்ளிட்ட பல துறைகளில் ஜப்பான் எப்போதுமே, இந்தியாவின் முக்கிய கூட்டாளி நாடாக செயல்பட்டு வருவதையும், ஜப்பானிய நிறுவனங்கள் இந்தியாவில் 40 பில்லியன் டாலர் முதலீடு செய்து இருப்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

சுசுகி போன்ற ஜப்பானிய நிறுவனங்களுக்கு இந்தியாவில் கிடைத்துள்ள வெற்றியை, மேக் இன் இண்டியா இயக்கத்தில் பங்கேற்பதன் மூலம், இதர ஜப்பானிய நிறுவனங்களும் பெற முடியும் என்று அவர் கூறினார். இதற்கேற்ற வலுவான அரசியல் பொருளாதார ஸ்திரத் தன்மையும், வெளிப்படையான கொள்கைகளும் இந்தியாவில் இருப்பதாக பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

ஜப்பான் பிரதமர் திரு ஷிகேரு இஷிபா, இந்தோ-ஜப்பான் பொருளாதார பேரவைக் கூட்டத்தில் பேசுகையில் இந்தியாவில் ஜப்பானிய நிறுவனங்களின் முதலீடுகள் தொடர்ந்து அதிகரிக்கும் என உறுதி அளித்தார்.

*முர்மு-விருது*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று புதுடெல்லியில் பொது துறை நிறுவனங்களுக்கான SCOPE விருதுகளை வழங்கி சிறப்பித்தார். மத்திய பொது துறை நிறுவனங்கள், நாடு விடுதலைப் பெற்ற நாளில் இருந்தே பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மாற்றங்களுக்கான சக்தி வாய்ந்த கருவியாக செயல்பட்டு வருவதாக அவர் தமது உரையில் கூறினார். நாட்டின் தொழில் மயம், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சமூக முன்னேற்றம், மற்றும் பிராந்திய சமநிலைக்கு அடித்தளம் இட்டதே பொது துறை நிறுவனங்கள் தான் என்று அவர் கூறினார். தேசிய இலக்குகளுக்கும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் அதிக முக்கியத் துவம் அளித்து பொது துறை நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய, சுயசார்பு நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில் பொதுத் துறை நிறுவனங்கள் முக்கிய பங்களிக்கும் என்றும்

குடியரசு தலைவர் கூறினார். மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சவுதிரி, பொது துறை நிறுவனங்களுக்கான அரசுச் செயலர் திரு மோசஸ் சாலை, பொது துறை நிறுவனங்களுக்கு இடையிலான SCOPE நிரந்தரக் கமிட்டியின் தலைவர் திரு மகாதேவ சாமி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

*அமித் ஷா*

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று அசாம் மாநிலம் குவஹாத்தியில், குவஹாத்தி ஆளுநர் மாளிகையின் புதிய பிரம்மபுத்ரா சிறகத்தை திறந்து வைத்தார். தேசிய சைபர் தடயவியல் பரிசோதனை கூடத்தை மெய்நிகர் முறையில் அவர் திறந்து வைத்து, பாதுகாப்பு படையினரின் பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார். சைபர் தடயவியல் பரிசோதனை வசதிகளால், சைபர் குற்றங்களில் இருந்து மக்களை காப்பாற்றவும் நாட்டின் ஒட்டுமொத்த பாதுகாப்பை மேம்படுத்தவும் ஏதுவாகும் என்று அவர் கூறினார். தொடர்ந்து குவஹாத்தியில் உள்ளாட்சி பிரதிநிதிகள் 20 ஆயிரம் பேரின் பங்கேற்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பஞ்சாயத்து சன்மிலன் மாநாட்டிலும் திரு அமித் ஷா கலந்து கொண்டார்..

*விளையாட்டு தினம்*

பழம்பெரும் ஹாக்கி வீரர் தியான்சந்த் பிறந்த நாள் இன்று தேசிய விளையாட்டு தினமாக கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். விளையாட்டுத் துறையில் தியான்சந்தின் புகழ், பல தலைமுறைகளுக்கு ஊக்கமளித்து வருவதாக சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் பிரதமர் கூறி உள்ளார். இந்தியாவில் அடித்தட்டு நிலையிலேயே விளையாட்டு திறமைகளை கண்டறிந்து பயிற்சி அளிக்க உலகத் தரம் வாய்ந்த வசதிகள் வழங்கப்படுவதாகவும், நாட்டின் விளையாட்டு கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றங்கள் உருவாகி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். விளையாட்டுத் துறையில் மேன்மையான உலக

கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில் நாடு முழுவதும் இன்று முதல் 3 நாள் விளையாட்டு உற்சவம் தொடங்குவதாக தெரிவித்துள்ளார். உலகத் தரம் வாய்ந்த Mondo தரை விரிப்புடன் கூடிய ஆடுகள வசதிகளை, விளையாட்டு வீரர்களுக்கு வழங்கும் 25 -ஆவது நாடாக இந்தியா உருவெடுத்து இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டி உள்ளார். 2030-ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளையும், 2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளையும் இந்தியாவில் நடத்த, இந்தியா விருப்பக் கடிதம் கொடுத்து இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்டவர்களும், தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து செய்திகளை வெளியிட்டு உள்ளனர்.

இதற்கிடையே, தேசிய அணியில் இடம் பெற்று தற்போது வேலை வாய்ப்பு இல்லாத நிலையில் உள்ள ஹாக்கி வீரர்களுக்கு, ஹாக்கி இண்டியா கூட்டமைப்பு, தலா 2 லட்சம் ரூபாய் மானிய உதவி அறிவித்துள்ளது. கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள ஹாக்கி வீரர்களின் எல்லாத் தரவுகளையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைக்க, டிஜிட்டல் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

*ஜெயக்குமார்-பூங்கா*

புதுச்சேரியில் 9.11 கோடி ரூபாய் மதிப்பில், புதிய தோற்றம் மற்றும் வசதிகளுடன் முற்றிலுமாக சீரமைக்கப்பட்டுள்ள தாவரவியல் பூங்காவை, இன்று வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் சுற்றிப் பார்த்து ஆய்வு செய்தார். சிறுவர்களுக்கான சிறப்பு ரயில் மற்றும் பார்வையாளர்களுக்கான பேட்டரி வாகனங்களையும் அவர் ஆய்வு செய்து பராமரிப்பு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பின்னர் திரு ஜெயக்குமார் பேசுகையில்,

முதலமைச்சரிடம் அனுமதி பெற்று வரும் செப்டம்பர் மாதம் தாவரவியல் பூங்கா திறக்கப்படும் என்றார். ஐஐடி வல்லுனர்களிடம் சான்றிதழ் பெற்று சிறுவர்களுக்கான பேட்டரி ரயில் இயக்கப்படும் என்றும் அவர் கூறினார். அமைச்சரின் பேட்டியில் இருந்து ஒரு பகுதி...............................

(வாய்ஸ்-அமைச்சர் ஜெயக்குமார்)

*காரைக்கால்-ரயில்*

வேளாங்கண்ணி மாதா கோவில் ஆண்டு திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக விழுப்புரம்-வேளாங்கண்ணி இடையே இன்று தெற்கு ரயில்வே இயக்கும் சிறப்பு ரயில், புதிதாக அமைக்கப்பட்ட பேரளம்-காரைக்கால் ரயில் பாதை வழியாக வந்த போது, புதுச்சேரி சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், மாநில குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர் திரு பி ஆர் சிவா ஆகியோர், திருநள்ளாறு ரயில் நிலையத்தில் மலர் தூவி ரயிலை வரவேற்றனர். ரயில் எஞ்சின் ஓட்டுனர்களுக்கு இவர்கள் மாலை அணிவித்து, திருநள்ளாறு முதல், காரைக்கால் வரை ரயிலில் பயணம் செய்தனர். சுமார் 40 ஆண்டு இடைவெளிக்கு பின்னர் திருநள்ளாறு ரயில் நிலையத்தில் பயணிகள் ரயில் நின்று சென்றது குறித்து அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

*காரைக்கால்-கோவில்*

காரைக்காலில் புகழ்பெற்ற ஸ்ரீ பொய்யாத மூர்த்தி விநாயகர் கோவிலில் இன்று நடைபெற்ற மகா கும்பாபிஷேக விழாவில் புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் கலந்து கொண்டு, தலைமை வகித்தார். குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு நாஜீம், திரு பி ஆர் சிவா, மாவட்ட ஆட்சியர் திரு ரவி மற்றும் ஏராளமான பொது மக்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

*நீதிபதி*

உச்சநீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட 2 புதிய நீதிபதிகளுக்கு தலைமை நீதிபதி திரு பி ஆர் கவாய், இன்று பதவிப் பிரமாணம் செய்து

வைத்தார். நீதிபதி திரு அலோக் அராதே, நீதிபதி திரு விஎம் பஞ்சோலி ஆகியோர் இப்புதிய நீதிபதிகள். இவர்களையும் சேர்த்து தற்போது உச்சநீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 34-ஆக அதிகரித்துள்ளது.

*வானிலை*

தென்னிந்திப் பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால் அடுத்த மாதம் 4-ஆம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், நீலகிரி, தேனீ, தென்காசி மற்றும் கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் குறிப்பாக மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. அதிக பட்சமாக, நீலகிரி மாவட்டம் பந்தலூரில், 15 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று டோக்கியோவில், ஜப்பான் பிரதமர் திரு ஷிகேரு இஷிபா-வுடன் இணைந்து, 15-ஆவது இந்தோ-ஜப்பான் வருடாந்திர உச்ச மாநாட்டில் பங்கேற்றார்.

இந்தியத் திறமைகளும், ஜப்பானிய தொழில் நுட்பங்களும் இணைந்து, இந்தியாவில் தொழில் நுட்ப புரட்சி ஒன்றை ஏற்படுத்த முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இன்று தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் 9.11 கோடி ரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ள தாவரவியல் பூங்காவை, இன்று வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் சுற்றிப் பார்த்து ஆய்வு செய்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------------------